# தமிழ் வளர்ச்சிக் கழகம்

# செய்தி மின்மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும் 1:2 சூலை 2025




## நன்றி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.07.2025 வெள்ளியன்று தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தொய்வின்றித் தொடர ஏதுவாக அதன் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களிடம் இரண்டு கோடியே பதினைந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வின்போது மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு நா. முருகானந்தம் இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு வே. ராஜாராமன் இ.ஆ.ப., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் திரு ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப (ப.நி.), தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் அகங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.



தமிழ் வளர்ச்சி ஒன்றையே தலையாய நோக்கமாகக் கொண்டு இயங்கிவரும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகட்கு நிதியின்மை ஒரு தடையாக இருக்கலாகாது என்பதாலும் அதனைப் பொருளா தாரத்தில் தற்சார்புடைய அமைப்பாக வலுப்படுத்தும் நோக்கிலும் அறங்காவல் குழுத் தலைவர் திரு ப. சிதம்பரம் அவர்கள் தமிழ்நாடு அரசு அளித்துள்ள நிதியோடு கூடுதலாக ஒரு கோடி ரூபாய் திரட்டப் பெருமுயற்சி மேற்கொண்டு வருகிறார். அவரது இம்முயற்சி பயன் தரத் தொடங்கியுள்ளது.



ஹாட்சன் அக்ரோ ப்ராடக்ட் லிமிடெட் (Hatsun Agro Product Ltd) நிறுவனத்தின் தலைவர் திரு ஆர்.ஜி. சந்திரமோகன் அவர்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத் தின் தமிழ்ப் பணி சிறக்க மனமுவந்து ரூபாய் பத்து இலட்சம் நன்கொடை நல்கியுள்ளார்.

அன்னாருக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் நன்றி பாராட்டுகிறது.




மாண்புமிகு முதல்வர்அவர்கள் வழங்கிய நிதி, அரசாணையின்படி தமிழ்நாடு மின்விசை நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. புரவலர் நிதியாகத் திரு சிவாலயம் மோகன் அவர்கள் அளித்த 10 இலட்சம் ரூபாயும் ஹாட்சன் அக்ரோ ப்ராடக்ட் லிமிடெட் (Hatsun Agro Product Ltd) நிறுவனத்தின் தலைவர் திரு ஆர்.ஜி. சந்திரமோகன் அவர்கள் அளித்த 10 இலட்சம் ரூபாயும் சிட்டி யூனியன் வங்கியின் திருவல்லிக்கேணிக் கிளையில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள சித்த மருத்துவக் களஞ்சியத் தொகுதிகள் இந்தியில் மொழிபெயர்க்கப்பட10 இலட்சம் ரூபாயும் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட 10 இலட்சம் ரூபாயும் உரிமைத் தொகையாகத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குக் கிடைத்துள்ளன.

அறங்காவல் குழுத் தலைவர் திரு ப.சிதம்பரம் அவர்களைத் தணிக்கையாளருடன் 2025 சூலை 12ஆம் நாள் சந்தித்தபோது பெற்ற வழிகாட்டலின்படி தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு வரும் புரவலர் நிதிக்கு வருமானவரி விலக்கு பெறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# நாடகவியல் கலைச்சொல் களஞ்சியம்



தமிழ் நாடகம் தொன்மை மிக்கது. தனிமனிதப் படைப்பாக்க வெளிப்பாடாக மட்டுமன்றி, இயல், இசை, ஆடல், பாடல், ஒப்பனை, ஓவியம், சிற்பம், ஒளிர்மை ஆகிய பல்வேறு கலைகளின் கூட்டுவினையில் தன்னைப் பரிமளித்துக்கொண்டிருப்பதும் நாடகம் ஆகும். பல்வேறு கலை, இலக்கியத் துறைகளைத் தனக்குள் பொத்திவைத்திருக்கும் நாடகம், அது தொடர்பான அறிவியல் பார்வையைத் தன்வயப்படுத்திக்கொண்டு, ‘நாடகவியல்’ என்கிற கருத்தமைவாய்த் தனித்து நிற்கிறது. அதில் பயின்றுவருகின்ற கலைச்சொற்களுக்கான விளக்கங்களைக் ‘களஞ்சிய’மாகப் பதிவுசெய்கிற முயற்சியே நாடகவியல் கலைச்சொல் களஞ்சியம் ஆகும். தொல்காப்பியம், நாட்டிய சாஸ்திரம், தசரூபகம், சிலப்பதிகார உரை, அபிநய தர்ப்பணம், நாடகவியல், கூத்த நூல், மதங்க சூளாமணி, வீரசோழியம் ஆகியவற்றிலிருந்தும் நாடகவியல் தொடர்பான பிற தமிழ், ஆங்கில நூல்களிலிருந்தும் திரட்டப்பெற்ற தரவுகளினின்றும் ஆயிரம் கலைச்சொற்கள் தெரிவுசெய்யப்பெற்று நாடகவியல் கலைச்சொல் களஞ்சியம் ஆயிரம் பக்க அளவில் பேராசிரியர் மு. இராமசுவாமி அவர்களால் உருவாக்கப்பெற்றுவருகிறது. இக்களஞ்சியத்தில் உரிய இடங்களில் ஓவியங்களும் படங்களும் சேர்க்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. தகவல் அளித்தலும், கற்பித்தலுமாகிய இரு பெரும் பண்புகளைக் கொண்டதாக இந்த நாடகவியல் கலைச்சொல் களஞ்சியம் அமையும்.

# பாராட்டும் வாழ்த்தும்



சென்னைப் பல்கலைக்கழகத்தின் கோட்பாட்டு இயற்பியல் துறை (Theoretical Physics)யின் தலைவர் பேராசிரியர் ரீட்டா ஜான் அவர்கள் ரூ. 5.4 கோடி மதிப்பிலான ஆய்வுத் திட்டம் மேற்கொண்டுவருகிறார்; அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்சு, கொரியா ஆகிய நாடுகளில் ஆய்வுரை நிகழ்த்திய பெருமை படைத்தவர்; மாநில அளவிலும் தேசிய அளவிலும் விருதுகள் பல பெற்றவர். அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பதிவாளராக அண்மையில் பொறுப்பேற்றுள்ளார். இதனால் பதவிவழி உறுப்பினராகத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் அவர் இடம்பெறுகிறார்.

அவருக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

# சொல் புதிது

தமிழ் ஊடகங்களில் அயல்மொழிச் சொற்கள் ஏராளமாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க உதவவும், பிற துறை குறித்துத் தமிழில் எழுது வோர்க்கு உதவவும், தமிழ் வளர்ச்சியின் பொருட்டும் **சொல் புதிது** எனும் திட்டத்தைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் 2025 மே முதல் செயற்படுத்திவருகிறது. ஒவ்வொரு மாதமும் இதற்கென அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழு கூடி, ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிச் சொற் களுக்கு நிகராக உருவாக்கிய தமிழ்ச் சொற் கள் தமிழ் வளர்ச்சிக் கழக வலைத்தளத்தில் வெளியிடப்படுகின்றன. ஊடகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் இரண்டாவது கூட்டம் 2025 சூன் 25இல் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் 25 தமிழ்ச் சொற் கள் உருவாக்கப்பெற்றன:

1. airbase - வான்படைத் தளம்
2. Artificial General Intelligence - பொதுச் செய்யறிவு
3. Artificial Super Intelligence - மீச்செய்யறிவு
4. Ballistic Missile - தொலையீர்ப்பு ஏவுகணை
5. Barricade - தடையரண்
6. Beautypreneur - வனப்பியல் முனைவோர்
7. Bulldozer - இடிவண்டி
8. Drone - வானீ/வானுலவி
9. Ecopreneur - சூழலியல் முனைவோர்
10. Electric cooktop - மின்னடுப்பு மேடை
11. First look - முதல் நோக்கு
12. Foodpreneur - உணவியல் முனைவோர்
13. Hyperloop track - தூம்பு வழித்தடம்
14. Hypersonic weapon - விஞ்சொலிப் படைக்கலன்/ ஒலிவிஞ்சு படைக்கலன்
15. Induction cooktop - மின்னலை அடுப்புமேடை
16. Social media post- சமூக ஊடக இடுகை
17. Social media story - சமூக ஊடக மொழிவு
18. Jet aircraft - பாய்விசை வான்கலன்
19. Jukebox - இசைதரு பெட்டி
20. Laser - கதிரியக்கம்
21. Launchpad - ஏவுதளம்
22. Living together - மன வாழ்க்கை/ அல்மண உறவு
23. Lyric video - பாவரிக் காணொலி
24. Microwave oven - நுண்ணலை அடுப்பு
25. Motion poster - இயங்குநிலை விளம்புகை

இவ்வாறு தமிழில் உருவாக்க வேண்டிய ஆங்கிலச் சொற்கள் வரவேற்கப்படுகின்றன. ஆர்வமுள்ளோர் தமிழ் வளர்ச்சிக் கழக மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

# சிந்தனைக் களஞ்சியம் (தமிழ்–ஆங்கிலம்)

உலக அரங்கில் சிறப்புக் கலைக்களஞ்சியங்கள் பற்பல அச்சிலும் இணையம்வழியும் வெளிவந்த வண்ணம் உள்ளன. அவற்றுள் ஒன்று சிந்தனைக் களஞ்சியம் ஆகும். ஆங்கிலத்தில் வெளிவந்த, தேர்ந்தெடுக்கப்பட்ட சிந்தனைக் களஞ்சியங்களின் பட்டியல் வருமாறு:

| வ. எண் | நூற்பெயர் | ஆசிரியர் | ஆண்டு |
|---|---|---|---|
| 1 | A Laconic manual and brief remarker: containing over a thousand subjects, alphabetically and systematically arranged | Charles Simmons | 1852 |
| 2 | Dictionary Of Burning Words Of Brilliant Writers: A Cyclo-paedia Of Quotations, From The Literature Of All Ages | Josiah Hotchkiss Gilbert | 1895 |
| 3 | Classical and foreign quotations; a polyglot manual of historical and literary sayings, noted passages in poetry and prose, phrases, proverbs, and bons mots; comp., ed., and told, with their references, translations, and indexes | William Francis Henry King | 1904 |
| 4 | Many Thoughts Of Many Minds | Henry Southgate | 1930 |
| 5 | The Oxford Dictionary of Quotations | Alice Mary Smyth (Ed.) | 1941 |
| 6 | Treasury of Thought | Dagobert D. Runes | 1966 |
| 7 | Dictionary of Quotations | Bergen Evans | 1978 |

இத்தகு சிந்தனைக் களஞ்சியங்கள் உருவாக்க ஆதார வள ஊற்று இருப்பினும் அறிவியல் நெறியில் இதுவரை தமிழில் உருவாக்கப்படவில்லை. எனவேதான் சிந்தனைக் களஞ்சியம் (தமிழ்-ஆங்கிலம்) என்னும் திட்டத்தைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளது.

தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள உயர்ந்த சிந்தனைகளையும் அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொண்டதாய் அமையவுள்ள சிந்தனைக் களஞ்சியம் (தமிழ்-ஆங்கிலம்) எனும் திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு:

- தமிழர்தம் சிந்தனை வளத்தை வெளிப்படுத்துதல்.
- தமிழர்தம் சிந்தனை வளத்தைப் அயல்நாட்டினரும் இந்தியாவிலுள்ள பிற மொழியினரும் அறிந்துகொள்ள உதவுதல்.
- உயர்ந்த சிந்தனைகள் ஊற்றெடுக்க உறுதுணையாதல்; ஞானம், நுண்ணறிவு, அகத்தெழுச்சி ஆகியவற்றின் கருவூலமாக (treasure trove of wisdom, insight, and inspiration)த் திகழ்தல்.
- தமிழர்தம் சிந்தனை வளர்ச்சி வரலாறு எழ மூல ஊற்றாக அமைதல்.
- இந்தியரும் அயல்நாட்டினரும் தமது எழுத்தையும் பேச்சையும் அழகுறவும் ஆற்றலுடனும் மேற்கோள்கள் வாயிலாக அமைத்துக்கொள்ளத் துணைபுரிதல்.



சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் அக்காலத் தமிழர்தம் சிந்தனைகளைக் கொண்டதாகச் சிந்தனைக் களஞ்சியம் (தமிழ்-ஆங்கிலம்) - தொகுதி 1 அமையும். சங்க இலக்கியங்களிலிருந்து தரவுகள் திரட்டும் பணியில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறைப் பேராசிரியர் முனைவர் வாணி அறிவாளன் அவர்கள் ஈடுபட்டுவருகிறார்.

## பாராட்டும் வாழ்த்தும்



கவிஞர் முனைவர் கோ. மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம், இலண்டன் குரோய்டன் தமிழ்ச் சங்கம் இணைந்து, பிரிட்டன் நாடாளு மன்றத்தில் தமிழ் மொழிக்குச் சிறந்த பங்களிப்பு நல்கியமை, காலத்தால் அழியாத அதன் பாரம்பரியத்தையும் பண்பாட்டுச் செழுமையையும் வளர்த் தமை, பல்வேறு தரப்பினரிடையே ஆழ்ந்த அறிவைப் பரப்பியமை ஆகியவற்றிற்காக அங்கீகார விருது 18.06.2025இல் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயலாளர் முனைவர் உலகநாயகி பழனி அவர்களுக்கு வழங்கப்பெற்றது. அன்னாரைத் தமிழ் வளர்ச் சிக் கழகம் பாராட்டி வாழ்த்துகிறது

## நூல் விற்பனை (50% கழிவுடன்)

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களும் 50% சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

**தொடர்புக்கு:**


**தமிழ் வளர்ச்சிக் கழகம்**

**மணிக்கூண்டுக் கட்டடம், சென்னைப் பல்கலைக்கழக வளாகம், சேப்பாக்கம், சென்னை 600 005**

**தொலைபேசி: 044-25365440 இணைய வலைத்தளம்: www.tamilvk.org**

**மின்னஞ்சல்: tamilvalarchikazhagam2024@gmail.com**

## வா. மு. சேதுராமன் (09.02.1935–04.07.2025) அஞ்சலி



பெருங்கவிக்கோ எனப் பரவலாகக் குறிப்பிடப்பெறும் முனைவர் வா.மு. சேதுராமன் பன்னாட்டுத் தமிழ் உறவு என்னும் அமைப்பின் நிறுவனர்; தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைமாமணி விருது, தமிழ்நாடு அரசின் திருவள்ளுவர் விருது, சி.பா. ஆதித்தனார் மூத்த தமிழறிஞர் விருது உள்ளிட்ட விருதுகள் பல பெற்றவர்; தமிழ்ப்பணி என்னும் சிற்றிதழை நடத்திவந்தவர்; நூல்கள் பலவற்றின் ஆசிரியர்; கவிஞரும், தமிழ் உரிமைச் செயற்பாட்டாளருமான இவரது மறைவுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் அஞ்சலி செலுத்துகிறது.